ஸ்ரீகுருப்யோ நம :

# ஸ்ரீகுருப்ரகாசம்

**சுடர்–7**

**ஓர் உபாஸகரான பகவானுடன்**

ஞானமர்க்கியம் ஞேயம் ஹவி: ஞாதா ஹோதா!
ஞாத்ரு ஞானஞேயானாம் அபேத பாவனம் ஸ்ரீசக்ரபூஜனம்!!

–பாவநோபநிஷத்து –10

ஞானம் அதாவது அறிவு அர்க்கியம், பஞ்சேந்திரியங்கள் மூலம் அறியப்படும் வஸ்துக்களே ஹவிஸ், அறிபவனாகிய தானே ஹோமம் செய்பவன் அறிபவன் அறிவு அறிபடும் பொருள் இம்மூன்றும் ஒன்றே என்ற அபேத பாவனை தான் – ஸ்ரீசக்ர பூஜை என்பதாம்.

## 1. அருணாசல ஜோதி

திருவண்ணாமலையில் வாழ்ந்து ப்ரஹ்மநிஷ்டர்களாய் அமைந்து உலகுக்கு "நான் யார்" என்ற ஆத்மவிசாரத்துக்கு வித்திட்ட ஸ்ரீரமண மஹரிஷிகளை ஆன்மீக உலகம் மறந்திருக்காது. அவர் நித்யஸூத்தர் தேகாத்மபுத்தியை அறவே நீக்கினவர். "நான் எனது" என்பதை தன் நாவாலும் சொல்லாதவர். சாக்ஷி சைதன்யர் இந்த பொய்யுடலை சற்றும் கருதாதவர். அவரது அற்புதங்கள் மிகப்பல. "எண்ணுருயாவுமிறையுரு வாமென வெண்ணிவழிபடனுந்தீபற ஈசனற் பூசனையுந்தீபற." என்று ஸமதர்சனமே கொண்டு நம்மை வாழவைத்த மஹான் ஸ்ரீரமண மஹரிஷிகள். அவர் வரலாறு பல மொழிகளில் உள்ளது. ஆனால் ஸ்ரீவேலவன் என்பவர் எழுதிய **"ஸ்ரீஅருணாசலஜோதி"** என்ற நூல் ஒன்றுண்டு அதில் உள்ள ஒரு நிகழ்ச்சி மற்ற வேறு எதிலும் இடம் பெற்றிருக்க ஞாயமில்லை. அந்நிகழ்ச்சி குருநாதரும் மஹரிஷிகளும் சம்பந்தப்பட்டதாகும்.

இந்த நூலாசிரியர் ஸ்ரீவேலவன் ஸ்ரீசிதானந்தரிடம் தீக்ஷை பெற்றவர். அவர் தமிழ் எழுத்துப்புலமை மிகப் பெற்றவர். குருநாதரிடம் எவ்வளவு பக்தியுண்டோ அதுபோலவே எங்கள் குருநாதரிடம் பற்றும் மதிப்பும் மரியாதையும் கொண்டவர். பிற்காலத்தில் குருநாதரால் எழுதப்பட்ட "ஸ்ரீகுமார ஸுப்ரபாதம்" நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ளார். இந்த அருணாசலஜோதி என்ற நூலில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சி பற்றி குருநாதர் ரேணுவிடம் நேரில் கூறியவைதான் இருந்தபோதிலும் ஸ்ரீவேலவன்

எழுத்து நடை ஒருஸ்வாரஸ்யம் என்பதால் அதனை அந்நூலிலிருந்து அப்படியே எழுதியுள்ளேன்.

## 2. ஸ்ரீசக்ரமும் மஹறிஷிகளும்

"'1949'ம் ஆண்டிலே, ரமணாசிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீமாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தில், ஸ்ரீசக்ரமேரு பிரதிஷ்டை செய்யப்பட்டது. நம் பாரத தேசத்திலுள்ள புனிதமும் புகழும் வாய்ந்த ஸ்ரீவித்யாமண்டலிகளில் ஒன்றாக விளங்குகிற ஸ்ரீகுஹானந்தமண்டலியின் ஆசார்ய மஹாபுருஷர் சிதானந்தநாதர் என்னும் பிரம்மஸ்ரீ ந. சுப்ரமணிய ஐயரவர்கள், அந்த ப்ரதிஷ்டையைச் செய்வதாக இருந்தது. ஆனால், எதிர்பாராதவாறு ஏற்பட்ட உடல் நலக்குறைவின் காரணமாக, அந்த ஆசார்யேந்திரரால் திருவண்ணாமலை செய்வதற்கு இயலவில்லை. எனவே, அவரது பிரதான சிஷ்யர்களில் ஒருவரும், ஸ்ரீவித்யாமார்த்தாண்டர் என்னும் பெருமைக்குரிய விருதினைப் பெற்றவரும், ஸ்ரீவித்யா சாஸ்திரங்களிலும் சம்பிரதாயங்களிலும் ஆழ்ந்த அறிவும் முதிர்ந்த அனுபவமும் வாய்ந்தவ ருமாகிய பிரம்மஸ்ரீ ஸி. வி. ஸ்வாமி சாஸ்திரிகளே பிரதான ஆசார்யராக இருந்து, அந்த ஸ்ரீசக்ரமேருவைப் பிரதிஷ்டை செய்து வைத்தார். ஸ்ரீகணபதிஹோமம், ஸ்ரீசண்டிஹோமம், ஸ்ரீவித்யா ஹோமம் போன்ற பலஹோமங்களும் நவாவரண பூஜை, குமாரி பூஜை, சுவாஸினி பூஜை போன்ற பூஜைகளும், மிக விமரிசையாக நடைபெற்றன. பூஜைகளுக்கும் ஹோமங்களுக்கும் உரிய திரவியங்கள் மலைமலை யாகக் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்த காட்சி, இராமாயணத்தில் வருணிக்கப்படுகிற தசரதனது யாகசாலையை நினைவூட்டுவதாய் இருந்தது. வேதிகைக்கு மேலே அறுபதடி உயரத்தில் ஸ்ரீசக்ரக்கொடி பறக்கவிடப்பட்டது. மேருவைப் பிரதிஷ்டை செய்வதற்கு முன்னால், அதனை ஸ்தாபிதம் செய்யப்போகும் பிலத்திலே, வேறு பல பொருள்களோடு ஒரு சில நவரத்னக்கற்களையும் போடுவது வழக்கம். ஆனால் ரமணாசிரமத்தில் நடைபெற்ற பிரதிஷ்டையின் போது, ஒரு சிறங்கை நவரத்னங்கள் போடப்பட்டனவாம்!

பகவான் ரமணருக்கு அப்போது உடல்நலமில்லா திருந்த சமயம். எனவே, அவரை ஒரு நாற்காலியில் வைத்து அந்த இடத்துக்குத் தூக்கி வந்தனர். அப்போது ஓர் அதிசயமான நிகழ்ச்சி நடந்தது.

அதாவது:–

பகவான் ரமணர் எப்போதும் கோவணதாரியாகவே காட்சியளிப்பது வழக்கம். அந்தக் கோவணத்தைத் தாங்கியிருக்கும் அரைஞாண், ஒரு சிறு துணியிலானதாகயிருக்கும். அவரது இடுப்பைச் சுற்றி ஒரு கயிறு போல் கட்டப்பட்டிருந்த அந்த துணியிலிருந்து, பத்து அல்லது பன்னிரண்டு சவரன் மதிப்புள்ளதும், சுமார் மூன்று அங்குல சதுரமுள்ளதுமான ஒரு ஸ்ரீசக்ரத்தையெடுத்து ஸ்ரீஸ்வாமிசாஸ்திரிகளிடம் கொடுத்து, மேருவைப் பிரதிஷ்டை செய்யவிருக்கும் பிலத்திலே நவரத்னக் கற்களோடு அந்த ஸ்ரீசக்கரத்தையும் போடுமாற பணிந்தார் பகவான் ரமணர். பகவானது இந்தச் செயலானது, அருகிருந்த எல்லோரையும் பெருவியப்பில் ஆழ்த்தியது. ஏனென்றால் ஸ்ரீசக்ரம் எனப்படுவது, தேவி உபாசகர்களால் மிகவும் இரகசியமாக வைத்துப் பூஜிக்கப்படுகிற ஒரு சக்தி வாய்ந்த யந்திரம். சக்கரங்கள் எனப்படுகிற யந்திரங்களுக்குள்ளே அது தலை சிறந்ததாய் இருப்பதால், அதற்குச் சக்ரராஜம் என்று பெயர். அதில் நாற்பத்திமூன்று முக்கோணங்கள் இருப்பதால், நாற்பத்து முக்கோணம் என்ற பெயரும் அதற்கு வழங்குவது உண்டு. ஸ்ரீசக்ரத்தின் மற்றொடு வடிவமே மேரு எனப்படுவது. எனவே, மேருவுக்குக் கீழே ஸ்ரீசக்ரத்தை ஸ்தாபிப்பது, மிகவும் பொருத்தமான ஒரு கிரியையே ஆகும். ஆனால், இந்த ஸ்ரீசக்ரத்தை பகவான் ரமணரிடத்தில் அதற்கு முன்பு யாருமே பார்த்ததில்லை. எனவே, அது அவருக்கு எப்போது கிடைத்தது, எப்படிக் கிடைத்தது என்பது, அங்கிருந்த எல்லோருக்குமே ஒரு புதிராக இருந்தது. மேலும், தேவி உபாஸகர்கள் மட்டும் வைத்திருக்கக்கூடிய அந்த ஸ்ரீசக்ரத்தை, பகவான் ஏன் வைத்திருக்கிறார்? எவ்வளவு காலமாக வைத்திருந்தார்? அப்படியானால் பகவானும் ஓர் அம்பிகை உபாசகரா? இம்மாதிரிக் கேள்விகள் எல்லாம், ஸ்வாமி சாஸ்திரிகள் உள்பட அங்கிருந்த எல்லோரது உள்ளத்திலும் எழலாயின.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், உலகறிய அம்பிகையை உபாசனை செய்தவர். ஆனால் பகவான் ரமணர், அம்மாதிரி வெளிப்படையாக எந்த ஓர் உபாசனையும் செய்தவரல்லர். அப்படியானால், எவருக்குமே தெரியாமல் அவர் அந்தரங்கமாக உபாசனை செய்து வந்தாரா? ஸ்ரீசக்ர உபாசனையை அந்தரங்கமாகத்தான் செய்துவர வேண்டும் என்று, சாக்த ஆகமங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆதிசங்கரரே அந்த உபாசனையை அப்படித்தான் செய்து வந்திருக்கிறார். அம்பிகை ஞானதாயினியாக இருப்பதால், தத்தாத்தேயர் போன்ற அவதூத மஹாத்மாக்களும், ஹயக்ரீவர், அகஸ்தியர், துர்வாசர் போன்ற மஹநீயர்களும் கூட, அவளைப்பூஜித்துப் பெறற்கரிய பேறுகளைப் பெற்றிருக்கின்றனர். அந்த மரபையொட்டி, பகவான் ரமணரும் அவளை அந்தரங்க மாகப் பூஜித்து வந்தாரா? பகவான் ரமணர் தம்முடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பல செய்திகளை அவ்வப்போது கூறி வந்திருக்கிறார். ஆனால், தாம் ஸ்ரீசக்ரத்தை உபாசனை செய்ததாக எந்தச் சமயத்திலும் யாரிடத்திலும் அவர் கூறியதேயில்லை. அன்னை சோரம் போய்விட்டாளானால், அந்தச் செய்தியை அவளுடைய மகன் எப்படிப் பிறருக்குத் தெரிந்துபோய்விடாதவாறு இரகசியமாகக் காப்பாற்றுவானோ அப்படியே, ஒவ்வொரு ஸ்ரீசக்ரஉபாசகனும், தன்னுடைய உபாசனையைப் பிறர் அறிந்து கொள்ளாதவாறு இரகசியமாகக் காப்பாற்ற வேண்டும் என்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தவிதியைப்பின் பற்றித்தான் பகவான் ரமணர் தம்முடைய உபாசனையைப் பற்றிய செய்திகளை எவரிடமும் பேசாமல் மறைத்து வைத்திருந்தாரா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் உண்மையான விடைகள் பகவான் ரமணருக்கும், அவருக்குள்ளே அனன்யமான அந்தர்யாமினியாக விளங்கிக் கொண்டிருந்த அந்தப் பரதேவதைக்கும் மட்டுமே தெரியும். மற்றவர்களெல்லாம் தமது விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் ஊகம் செய்ய முயல்வது, வீணான வேலையேயன்றி வேறல்ல. பகவான் ரமணர் அந்த ஸ்ரீசக்ரத்தை அந்தரங்கமாக உபாஸனை செய்து வந்திருந்தால், இறுதியில் அவர் அதை யாரிடத்தில் விட்டுச்செல்வது? ஸ்ரீவித்யோபாசனை எனப்படுகிற தேவி உபாசனையில் அவருக்கு யாரேனும் சிஷ்யர்கள் இருந்திருந்தால், அவர்களிடம் அதைக் கொடுத்துவிடலாம்.

ஆனால் அத்தகைய சிஷ்யர்கள் அவருக்கு யாருமே கிடையாது. ஆகையால் ஸ்ரீமாத்ருபூதேஸ்வர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படுகிற மேருவுக்கு அடியில் அதை ஸ்தாபித்து விடுவதே சிறந்தகாரியம் என்ற அவர் முடிவு செய்திருக்க வேண்டும். அதனால்தான், தாம் அதுவரையில் எவருக்கும் தெரியாமல் இரகசியமாக வைத்திருந்த அந்த ஸ்ரீசக்ரத்தை, அன்றைய தினம் எல்லோரும் அறிய வெளியில் எடுத்து, அங்கு பிரதான ஆசார்யராக இருந்து மேருப்பிரதிஷ்டை வைபவத்தை நடத்திக் கொடுத்த பிரம்மஸ்ரீஸ்வாமிசாஸ்திரிகளின் கையில், பகவான் ரமணர் கொடுத்திருக்கிறார் என்று கருதவேண்டியதிருக்கிறது."

இப்பகுதியை இதுவரை அந்நூலிலிருந்து படித்தோம் "பகவானுடைய உபாஸனா ரஹஸ்யத்தை தன் சிஷ்யன் அறிந்து தன்யனாகட்டுமே என்று தாள் ஸர்வக்ஞரான "ஸ்ரீஸார்" அவர்கள் தனக்கு உடல் நலக்குறைவு என்ற நிலையை ஏற்படுத்திக் கொண்டார்களோ? என்று எண்ணினேன்" என்று குருநாதர் ரேணுவிடம் கூறினார்கள்.

### 3. ஸ்ரீசக்ரம் – உள்முக வழிபாடு

பிந்து திரிகோண வஸு கோண தசாரயுக்மம்
மன்வச்ர நாக தலஸம் யுதஷோடசாரம்!
விருத்தத்ரயம் சதரணிஸதனத்ரயம் ச
ஸ்ரீசக்ரமேத்துதிதம் பரதேவதாயா!!

SRI CHAKRA

The point, the triangle, the eight–Cornered figure the two ten–edged fig–ures the 14 cornered figure eight petals, 16 petals the three circles, and the three squares this is called the "SRI CHAKRAM" of the supreme Daity. –(Yamala)

The Pattern of CREATION FORMULA The SRICHAKRA remains the most Powerful force in the world for the Peace and upliftment of mankind. The Supreme Absolute in the form of Mother has given birth to the UNIVERSE and provides for the prosperity and enlighten–ment of HER children with loving compassion.

– Swamy Saraswathi Devyeshram STROUDSBURG, U.S.A.

தேவி வழிபாட்டின் பிரதான சக்ரம் "ஸ்ரீசக்ரம்" இது இந்த ப்ரபஞ்சம், உடல், தேவியின் இருப்பிடம் என்ற மூன்று நிலையினை குறிப்பிடும். "அண்டத்திலுள்ளது தான் பிண்டத்திலும்" என்பார்கள். ஸ்ரீசக்ரத்தின் பிந்துஸ்தானத்தில் தான் சக்தியின் "சித்வடிவம்' பிரகாசிக்கிறது. இதுபோல் சரீரத்தையே ஸ்ரீசக்ரமாகக் கொண்டால் "ப்ரஹ்ம ரக்த்ரம்" மே சித்ஸ்வரூபமாம் ஆன்மா விளங்குமிடம். சில யோகிகள் மஹான்கள் சரீரத்தில் "ஹ்ருதயாகாசம்" என்ற "அநாஹத்" பத்மத்தில் ஆன்மஸ்தானம் என்று கூறியுள்ளார்கள்.இந்த வழியில் தான் ஸ்ரீபகவான் ரமணரும் ஹ்ருதயத்தில் த்யானம் செய்ய வேறுமென்று கூறியுள்ளார்கள். யோகிகள். அந்தர்முக உபாஸனை செய்பவர்கள் ஹ்ருதயமே அந்தரங்க உபாஸனையின் இடம். ஸ்ரீசக்ரத்தில் அந்தர்தசாரம் எனப்படும் உள்பத்துக் கோணம் இந்த அநாஹதமே. எனவே தான் ஸ்ரீரமணரும் உள்முகவழிபாடாம் ஸ்ரீசக்ர வழிபாடு ஏன் செய்திருக்கக்கூடாது? இது தான் தற்போது வெளிப்படையாக தெரியவந்தது. "நான் யார்' என்பதை விசாரித்து அறிந்து "நாள்" என்பது ஆனந்தமான "ஆன்மாவே" அஹம் ப்ரஹ்மாஸ்மி) என்பதை உணர்ந்து ஒரே முகமாக மனதின் வருத்திகளை ஒடுக்கி ஆன்மத்யானத்தில் ஆழ்ந்து எஸமாதி கைவரப்பெற்று ஸித்திபெறுவது என்பது அத்தனை எளிதான செயல் அல்ல. இந்த ஸித்தியானது தொடர்ந்த பயிற்சியினாலும் கேவல குரு அருளினாலும் கடுமையான தபஸினாலும் தான் கைகூடும் ஸ்ரீரமணரும் கூட பல ஆண்டுகள் இவ்வாறு தவம் செய்தவரே. நவாவரண பூஜையில் நவாவரணநிலையான ஸவிகல்பஸமாதி நிலையில் அடுத்தப்படி – அதாவது அதன் முதிர்ந்த நிலையில் "நிர்விகல்ப ஸமாதி" என்பது இதுவே ஸஹஜஸ்திதி – ஜீவன் முத்தி என்றும் கூறப்படும். மஹான்களின் வாக்குப்படி முடிந்த முடிவாகத் தெரிவது யாதெனில் இந்த ஸஹஜஸ்திதியேதான் ஸ்ரீவித்யா உபாஸனையின் பயன் பலன். இதன் காரணமாகவே ஸ்ரீசிதானந்தநாதரால் ஸ்ரீவித்யா உபாஸனையே ப்ரஹ்மவித்யாஉபாஸனை என்ற முடிவில் – வேத சிகையான உபநிஷத் ப்ரதிபாத்யமான இந்த நிலையை எஸிந்தாந்தப்படுத்தி அனேக க்ரந்தங்கள் செய்யப்பட்டது. எனவே நமது பாரத தேசத்தில் தோன்றிய அனேக மஹான்களும் யோகிகளும் ப்ரஹ்மவித்யா உபாஸனையாகிற ஸ்ரீவித்யா உபாஸனையை வெளிப்படை யாகவோ – அல்லது அந்தர் முகமாகவோ செய்தவர்கள் தான். இந்த வழியில் தான் ஸ்ரீரமணமஹரிஷிகளும் ஸ்ரீசக்ரவழிபாட்டை செய்தது மேற்கண்ட நிகழ்ச்சியால் வெளிப்பட்டது நமதுபாக்யமே!